முரசொலி

வார வெளியீடு

ஆசிரியர் மு. கருணாநிதி.

ஆண்டுத்தொகை ரூ. 5

முரசு 1] [ஒலி 14

திருவாரூர்.
பெரியார் ஆண்டு 69
சித்திரை 9 புதன்
(21-4-48)



நேற்றுவரையில்

ஏப்ரல் 13

இத்தாலிக்கு ட்ரீஸ்டியைத் திருப்பித் தருவதுபற்றி பிரிட்டிஷ்-அமெரிக்கா—பிரஞ்சு நாடுகள் மேற்கொண்டிருக்கும் முறை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்று சோவியத் யூனியன் அறிவித்ததாக மாஸ்கோ ரேடியோ தெரிவித்தது.

பாகிஸ்தான் பிரதேசத்தில் புகாமல் அஸ்ஸாம்—இந்தியா ரோடி ரஸ்தா இன்று திறந்து வைக்கப்பட்டது.

●

ஒரிஸாவின் புதுத் (தலைநகர)மாக புவனேச்வராவில் பண்டித நேரு அஸ்திவாரக்கல் நாட்டினார்.

ஏப்ரல் 14

மதுவிலக்கு மந்திரி தோழர் டானியல் தாமஸிடம் தற்காலிகமாக சட்ட இலாகா ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

●

கொலைசெய்தால் தூக்குத்தண்டனை அளிப்பதை ஐந்து ஆண்டுகளுக்கு (சோதனை காலமாக) ரத்து செய்துவிடுவதென இன்று காமன்ஸ் சபையினர் முடிவு செய்தனர்.

●

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பெல்லாரி ஜில்லாவில் சங்கன் கல் கிராமத்தில் நிலத்தை தோண்டியெடுத்ததில் ஒரு கல்வெட்டு கிடைத்துளது. சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் உண்டான கல்வெட்டென்று கூறப்படுகிறது. உளி, கோடரி, சம்மட்டி ஆகியவை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களுக்கு ஆராய்ச்சிக்கென அனுப்பப்பட்டுள்ளது.

●

எகிப்திலிருந்து 10,000 டன் அரிசி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது.

ஏப்ரல் 15

டாக்டர் பி. ஆர். அம்பேத்காருக்கும், பார்ப்பன வகுப்பைச் சார்ந்த டாக்டர் லட்சுமி கபீருக்கும் திருமணம் நடந்தது.

●

சிம்லா பகுதியில் 21 சமஸ்தானங்கள் "இமாலயப் பிரதேசமாய்' ஐக்யமாயிற்று.

●

ஏப்ரல் 16

டி. பி. என்ற எலும்புருக்கி வியாதியை குணப்படுத்த "ஸ்டிரெப்டோமைஸின்" என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

●

ஐரோப்பிய புனரமைப்புக்காக அமெரிக்கா உதவிசெய்யும் மார்ஷல் திட்டத்தில் 18 நாடுகளின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

●

ஆதி திராவிடர் கோட்டைகள்.

14—4—48-ல் இரவாஞ்சேரி கிராமத்தில் மாநாடுபோல் கூடிய ஆதிதிராவிடர் கூட்டத்திற்கு தோழர் V. G. அரங்கராசு தலைமை தாங்கினார். தோழர்கள் மு. கருணாநிதி D. ராசய்யா, சண்முகம், சிவம் ஆகியோர் பேசினர்.

15-4-48-ல் தோழர் அரங்கராசு தலைமையில் ஆயிரக்கணக்கில் ஓடாச்சேரி கிராமத்தில் கூடிய ஆதி திராவிடர் கூட்டத்தில் தோழர்கள் ஷம்சுதீன், மு. கருணாநிதி, N. V, சீனுவாசன், கோவிந்தசாமி ஆகியோர் பேசினர்.

ஆதிதிராவிட மக்களிடையே இன உணர்ச்சி பெருக்கெடுப்பதற்கு இந்த இரு கூட்டங்களும் நல்ல சான்றுகள்.

ஏப்ரல் 17

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக வீனர் எல்பிடியோ குறினோ விசுவாசப் பிரமாணம் ஏற்றார்.

●

ரீவா மாஜி மகாராஜா கைது செய்யப்பட்டார்.

●

சயாமில் மார்ஷல் பிபுல் சாங்ராம் மந்திரி சபை பதவி ஏற்றுக்கொண்டது.

●

ஏப்ரல் 19

தளபதி சியாங்கே ஷேக் சீனாவின் முதல் அரசியல் முறை தலைவராக (8161 வோட்டுக்கள் வித்தியாசத்தில்) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

●

மு. கருணாநிதி

இரத்தக் கண்ணீர்!

தொடர் கதை.

2

தௌ......தௌ......என்ற சங்கநாதம்—தடதடவென்ற பேரிகை முழக்கம்; இவைகளினூடே.........

"ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகுலதீப ராஜகெம்பீர ராஜநாராயணதாச ரகுவம்ச மழவர் பாண்டிய மகாராஜாவின் மைந்தர்—வீராதி வீரர் விஷ்ணு பக்தர்.....இளவரசர் வைரமுடிப் பாண்டியர் பராக்".

"ஞானாதி ஞான.......ஞான மார்க்க தெய்வச் சிரோன்மணி ஞானாச்சார்ய சுவாமிகள் பராக்".

என்று காவலாளிகள் வாய் கிழியக் கத்தி ஓய்ந்தனர். தோளிலிருந்து நழுவிக் கொண்டிருந்த காவிநிறப் பட்டாடையை லாவகமாக கையில் இழுத்துப் போட்டுக்கொண்டு, விரலில் மின்னும் வைர மோதிரங்களைத் திருகிக் கொண்டே ஞானாச்சார்யா அழகு நடைபோட்டு கம்பீரமாக நடந்து வந்தார். வாட்ட சாட்டமான உருவமும்.....குட்டையான தாடியும்.. எதிரில் இருப்பவர்களைத் துரும்பென மதிக்கும் கண்களும்......யானைபோல் உடலனைத்தையும் அசைக்கத் தானே செய்துகொண்ட பழக்கமும் ஆச்சார்யாவின் பால் ஆயிரமடங்கு மதிப்பை மக்களிடத்தில் ஏற்றியிருந்தன. இல்லாவிட்டால் அவர் முகத்தைக் கண்டதும் 'எங்கள் ஞானகுருவுக்கு ஜே' என்று சபையோர், மண்டபம் நொறுங்கி விடும்படி கத்துவார்களா? அவர்கள் மெய் மறந்து கோஷிப்பதும்.. அதை அங்கீகரிப்பவர் போல ஆச்சார்யா, தன் தாடியை தடவிக் கொண்டே ஒரு சின்னஞ்சிறு கடுகுச் சிரிப்பு சிரிப்பதும்...... அந்தக் காட்சி அனைத்தும் 'கடவுள் அனுக்ரகம்' என்று, எண்ணியபடி இளவரசன் பின்னே தொடர்ந்து வருவதும் அன்றாட நிகழ்ச்சிகள்.

வழக்கம்போல சக்கர பீடத்தில் ஞானாச்சார்யார் அமர்ந்தார். இளவரசன் பீடத்தை ஒருமுறை வலம் வந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு.......தயாராக சேவகன் வைத்திருந்த மலர்களை எடுத்துத் தூவி பாதபூசை செய்தான்.

'எதிரிகளின் கோட்டை கொத்தளங்களை முற்றுகையிட்டு சுற்றிச் சுற்றி சூறாவளி வேகத்தில் போர் புரிந்த பாண்டியனின் மகன் என்னைச்சுற்றி—வலம் வருகிறான். சரணடைந்த எதிரிகளின் தலைகளைத் தன் காலடியில் கண்ட மழவன் பெற்ற காளை, என் பாதங்களுக்கு மலர் தூவுகிறான். வாளுக்கு முத்தமிட்டு வாழ்ந்த வம்சத்தில் பிறந்த வைரமுடி, என் தாளுக்கு முத்தமிட்டுக் கிடக்கிறான். வீராதி வீரர்கள் வேல் விழிகளின் பாய்ச்சலால் வீழ்வதுண்டு சூராதி சூரர்கள் சுவை மொழியாளின் இதழுண்ண சுற்றியலைவதுண்டு. அது ஒரு தனி உலகம் அதைவிட சுலபமாக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதே என் உலகம். அந்த உலகத்திற்கு அழகு—...அழகிலும் மெருகு...மெருகிலும்...பளபளப்பு...பளபளப்போடு பகட்டு, இதயம் இழுக்கும் இதழோரப் புன்னகை—ஈட்டியினும் கூரிய பார்வை—பார்வையிலே மோகனம்—தளுக்கு மினுக்கு—சுருங்கச் சொன்னால் வண்டை அழைக்கும் வனப்பு அந்த மலர்களுக்குத் தேவை.

என் உலகமோ.........ஒரே வார்த்தையில் உருளுகிறது. "நாராயண நமஹா" இந்த வார்த்தைக்குத்தான் எவ்வளவு காந்த சக்தி!

ஒரு நாலுமுழக் காவித்துணி, நாராயணா என்ற முணு முணுப்பு. இதுதான் இந்த உலகத்தின் ஆரம்பம்.

அந்த உலகம் ஆரம்பத்தில் ஆனந்தமாயிருக்கும். கிழடு தட்டியதும் கீழே விழும் சருகு போல் அழகு குறைந்ததும் அந்த உலகம் ஆட்டங்கொடுத்து விடும்.

வயது ஏற ஏறத்தான் என் உலகம் வைரம் பாய்ந்த பனை போல் உரம் பெறுகிறது.

எனக்கு என்னமோ......இவ்வுலகம் வெகு சுலபமாய் உண்டானதாகத் தெரிகிறது. இன்ப உலகத்தில் என் போன்றவர் மிதந்திட.........என் முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள்! எவ்வளவு எதிர்ப்பு சக்திகளை சமாளித்திருக்கிறார்கள்! இன்று நான் 'நாராயணா' என்கிறேன், நாய் போல் மக்கள் என்னை நத்துகிறார்கள். இந்த நாராயணன் சொல்லுக்கு எவ்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

வளவு கஷ்டப்பட்டு—எவ்வளவு புராணங்கள் உண்டாக்கி—எவ்வளவு பொய்கள் சொல்லி—மா பெரும் சக்தியை—மக்களைப் பணியவைக்கும் சக்தியை என் முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இல்லையேல் இன்று ஞானச்சார்யாவின் பாதங்களில் பாண்டியனைக் காண முடியுமா?.........

யாகம் நடந்துகொண்டிருக்கும் ஆட்டின் கழுத்தில் பாதி வெட்டப் பட்டிருக்கும். அந்த அசுரர்கள் நுழைவார்கள். யாகம் அழியும், அசுரர்களா அவர்கள்?......எங்களை எதிர்த்தவர்களுக்கு நாங்கள் தந்த பட்டமது! இந்த வைரமுடிப் பாண்டியன் இன்று என்னை எதிர்த்தால் நாளை இவன் அரக்கன். நான் மகாவிஷ்ணுவின் அவதாரம். அருமையான புராணம் தயாராகிவிடும் புராணம்!......வில் வாள் தோள் இவைகளை ஒரே மூச்சில் எதிர்த்து விரட்டும் ஆரியாஸ்திரம்! இந்த அஸ்திரம் உள்ளவரையில் நாங்கள் வாழலாம்.''

ஞானச்சார்யாவின் பாதங்களில் மலர்கள்.........விழுந்து விழுந்து உருண்டன. அவர் இதயத்தில் இந்த எண்ணங்கள் எழுந்து எழுந்து குதித்தன. இதய ஒலி......அவர் முகத்தில் இன்ப ஒலியைத் தந்தது. சிரித்துக்கொண்டார். அந்தச் சிரிப்பில் எவ்வளவு அர்த்தங்கள். ''அட பைத்தியக்காரர்களே! மூடர்களே! ரதகஜ துரகபதாதிகள் இருந்தும், ராஜாங்கங்கள் பல அடிமைகளாக இருந்தும், என் முன்னே புழுக்களாகி விட்டீர்களே'' என்று விளக்கம் தந்தது அந்தச் சிரிப்பு.

இளவரசன் சிம்மாசனத்தில் உட்கார்ந்தான். ''டாண் டாண்'' என்றது ஒரு பெரிய மணி. கொலுமண்டபம் அமைதி வழங்கியது. கருடன்கள் இரண்டு நடந்துவந்து....திடீரென வட்டமிட்டன. பாடிக்கொண்டே ஒரு ஆஞ்சநேயர் ஆடினார்.

''அலைமோதும் கடல்துயில் அரங்கன்,
மலைமோதும் மாவலித்தோள் மதிபன்,
இராவணன் வம்சம் இலா தொழித்தோன்,
முராரிமுகுந்தன்...மூவுலகின் தலைவன்''

பாட்டுக்கேற்றபடி ஆட்டம். அது முடிந்து தரையில் ஓடும் பாம்பைப் பிடிப்பது போலும்—குளத்தில் துள்ளும் மீனைக் கொத்துவது போலும்-விஷ்ணுவின் வாகனமாய் விண்ணில் வட்டமிடுவது போலும்—அந்தக் கருடன்கள் பாவங்கள் காட்டி நாட்டியம் புரிந்து...கடைசியில் 'நாராயணா' என்ற ஆஞ்சநேயரின் அலறலோடு கால் சதங்கையின் சப்தத்தை நிறுத்தி வணங்கிக் குனிந்தன.

இளவரசன் பரிசளித்தான். அந்த முத்தாரங்களை வாங்கும் போதுதான் கருடன்கள் பெண்களாகவும்—ஆஞ்சநேயர் நட்டுவனாகவும் காட்சி தந்தனர். சபையில் ஒரே ஆரவாரம், ஞானச்சார்யா நிமிர்ந்தார். மீண்டும் அமைதி குடியேறிற்று.

ஞானச்சார்யா கம்பீரமாக எழுந்து நின்று......

''இளவரசரே! பக்த சிரோன்மணிகளே!'' என்று ஆரம்பித்தார். அரசோச்சும் மன்றத்தை ஆண்டி மடமாக்கி விட்டாரே என்று ஆச்சரியப் படுவதற்குக் கூட அங்கு ஆளில்லை. ஞானச்சார்யா பேசத்துவங்கினார்.

''நாராயணனின் திருவருளைப் பாருங்கள். நேற்றிரவு யாரோ இரு சமணக் குண்டர்கள் ஆற்றோரத்திலுள்ள நாராயணப் பெருமான் சிலையை உடைக்க முயற்சித்திருக்கிறார்கள்.''

இதைச் சொல்லும்போது ஆச்சார்யாவின் முகத்தில் சோகம் பெருக்கெடுத்தது. அதை சோகமென்று நம்பிய இளவரசன், ஆத்திரமாக......''ஆ என்ன?'' என்று உடைவாளை உருவினான்.

''வேண்டாம், வைகுந்தன் உமது வாளுக்கு வேலை வைக்கவில்லை. துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனன் அல்லவா துவாரகாநாதன்! அந்த துரோகிகள் அய்யனைத் தொட்டதுதான் தாமதம் ...சிலையின் கையிலிருந்த சக்ராயுதம் கிளம்பி...அந்தக் குண்டர்களின் குலையை அறுத்து அவர்கள் வீடுகளையும் கொளுத்தி மகிழ்ந்ததாம்.''

வெற்றிச் சிரிப்பு வெடிக்க இதைச் சொல்லி முடித்தார் ஆச்சார்யா!

''சமணர்கள்......அவ்வளவு சண்டாளத்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டார்களா?'' இளவரசன் கர்ஜித்தான்.

''சமணர் மட்டுமா?...பௌத்தர்கள் என்ன ஒழுங்கோ?......இளவரசே! வைணவத்தைத் தவிர வேறு எந்த மதப்பிரசாரம் நடந்தாலும் சட்டவிரோதம் என்று எச்சரிக்கை செய்திருந்தும்.....இந்த அநியாயங்கள் அன்றாடம் நடைபெறுகின்றன.

9-ம் பக்கம் பார்க்க

கல்கியார் தூபம்!

அலை ஓசைக்காரர் அலறல்!

உரல் மத்தளமான கதை.

(கரந்தை, என். எஸ். சண்முகவடிவேல்)

வருங்கால கனம்—நண்பர் கல்கியார் நடத்தும் ஏப்ரல் 11, 'கல்கி' இதழில் 'திருப்தி அடையாதீர்' என உபதேசமொன்று தீட்டியுள்ளார்.

கோகில கானத்து இசைப் பொழிவிலே "சுதந்தரம் வந்தது சுகப்பட்டோம்" என்று கேட்டுக்களித்தவர், அந்த கீதத்தில் அபசுரம் இருப்பதை இப்போதுதான் கண்டார் போலும்.

"சுதந்தரம் வந்தும் நமது துன்பம் தீரவில்லை......ஏன்?" என்று நம்மையே கேட்கின்றார். அன்றைக்கே நாம் காரணத்தை எடுத்துக் காட்டினோம். எரிந்து விழுந்தார்கள். இன்று "காங்கிரஸ் ஆட்சியில் கதிமோட்சம் பிறக்கும்; நமது கஷ்டகாலம் நீங்கும் என்றது தவறு" என தான் சார்ந்த கட்சியையே பலமாகக் கண்டிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. கண்டனம் கர்ஜனையாக மாறி கனம் அவிநாசியார் மீது கணை தொடுத்துவிட்டார். கல்கியார்! குற்றவாளிக் கூண்டிலே அவிநாசியாரை நிறுத்தி ஒன்பது குற்றங்களை வீசியிருக்கிறார். அவைகளில் சில ஒப்புக் கொள்ளப்பட வேண்டியவைகளாயினும், பெரும்பாலானவை அவர் இனத்தைக் காக்கவே தீட்டப்பட்டவை என்பது தெளிவாகிறது.

"மாகாண மந்திரி சபை ஏற்பட்டு இரண்டு வருஷம் ஆகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்து எட்டுமாதம் ஆகிறது. ஆயினும் மெக்காலே துரையின் ஆவி சுற்றிச் சுழலுகிறது" என்கிறார் கல்கியார்.

அதாவது "ஆங்கில நாட்டு சரிதங்கள் வெளிநாட்டின் சீதோஷ்ண நிலை, உலகியல் நிலையை அறிதல் ஆகிய இந்த முட்டாள் தனங்களில் நம் குழந்தைகளின் அறிவைப் பாழாக்கும் கொலைபாதகக் கொடுமைகள் இன்னும் நமது கல்விமுறையிலிருந்து ஒழிந்தபாடில்லை" நாம் சொல்லவில்லை கல்கி இதழ் சொல்லுகிறது.

இராமன் மனைவி சீதையை இராவணன் வான ஊர்தியில் பத்து தலைகள்கொண்டு இருபது கரங்களால் அணைத்து எடுத்துச்சென்ற கதை, ஐவருக்கும் இன்பத்தை அள்ளி வழங்கி ஆறுவதாக கர்ணனுக்கும் தர்மம் செய்ய தவங்கிடந்த தர்மபத்தினியின் கற்பு, அரிச்சந்திரன் தன் மனைவியை விற்ற மானங்கெட்ட நிலை, கண்ணன் குழலூத, கண்ணாட்டிகள் கடைக்கண் வீசும் காதல்ரசக் காட்சி ஆகியவைகள் பாடமாக இருப்பது மட்டும் கல்கியாருக்கு முட்டாள்தனமாக தோன்றவில்லை போலும். ஒருவேளை கல்கியார் அகராதியில் அறிவு என்பதற்கு முட்டாள்தனம் என்று அர்த்தம் போலும்.

காந்தியாரின் நிர்மாண திட்டத்தை பள்ளிகளில் போதிக்க வேண்டுமென்கிறார். அவர் வைஷ்ணவ ஜனதாவைத் தான் குறிப்பிடுகின்றாரோ என்னவோ?........வைஷ்ணவ ஜனதா பாடமாக்கப்பட்ட பிறகு கல்கியாரின் தலையங்கம் "எம். எஸ்ஸின் வைஷ்ணவ ஜனதா" என்ற விதத்தில் அமைந்தால் ஆச்சரியப் படமாட்டோம்.

"வகுப்புத் துவேஷ மந்திரி சபை என்று பிரச்சாரம் செய்ய ஓரளவு இடங்கொடுப்பது கல்வி இலாகாவேயாகும்" என்றோர் பெருங் குற்றத்தை கல்வி இலாகாவின் தலையில் தூக்கிவைக்கிறார். சாதி அகம்பாவத்தின் உச்ச நிலையைக் காட்டிக்கொண்டிருக்கும் காலணா பூணூலை ஒருமுறை உருவிக்கொண்டுதான் உத்வேகம் கொப்பளிக்க கல்வி இலாகாவை நோக்கி கனைத்திருக்கிறார் அன்பர். கல்லூரிகளில் "சாதி வேற்றுமை, வகுப்புத்துவேஷம் ஆகியவற்றைப் புகுத்தாமல் கலாசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்ள ஒரு தர்ம நியாயமான முறையைக் கையாள வேண்டும்" என்று கூறும் கல்கியார் ஏன் அந்த வகுப்புபோதை கல்லூரிகளில் பாடமாக்கப் பட்டிருப்பதற்கு விலக்கு கோரவில்லை? வர்ணாஸ்ரமம் கெட்டால் தன் இனம் வாழ முடியாது என்பதை உணர்ந்த யூகஸ்தரல்லவா அவர்?

"டாக்டர் லட்சுமணசாமி முதலியார் சிறந்த அறிவாளி, படிப்பாளி.........ஆனால் அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

முரசொலி

பெரியார் ஆண்டு 69
சித்திரை 9 புதன்
(21—4—48)

தூத்துக்குடி!

தூத்துக்குடி! மிக மிக நெருக்கடியான நேரத்தில் நடைபெறுகிறது. சரிகைத் தொப்பிகளை சாய்த்த பெருமை சேலத்திற்கிருப்பது போல-கருஞ்சட்டை வீரர்களைத் தோற்றுவித்த புகழ் திருச்சிக்கு இருப்பது போல—தூத்துக்குடியும் ஒரு தனிப் புகழ் அடைய மே 8, 9 தேதிகள் அமைக்கப்பட வேண்டும். திராவிடர் கழகத்து நடவடிக்கைகள் இனி தீர்மானம் போடுவதோடு நின்று விடுவதும், மாநாடுகளைத் திருவிழா போல நடத்துவதுடன் முடிந்து விடுவதுமாக இருத்தல் முடியாது. இருக்கவும் கூடாது.

பிரச்சார பலம் தேவையென்கிறார் பெரியார். ஆனால் பிரச்சாரத்திற்கு அவரே போக வேண்டிய நிலையுளது. அமைப்பு முறை வகுத்துங்கூட மாவட்ட கழகங்கள், தாலுக்கா கழகங்கள், நகர கழகங்கள் கூட தங்கள் வேலைகளை அமைப்பு முறையில் செய்ய பழகிக்கொள்ள வில்லை. பழகிக் கொண்டவர்களும் பணிபுரிய வருவதில்லை. சிற்சில இடங்களில்தான் செயல் அரும்பியிருக்கிறது. அவைகளும் கருகிய மொட்டுகளாகி விடாமல் வளமேற்றம் கொண்டு பெரியார் அவர்களைச் சார்ந்து.....அவர்களுக்கு அல்லல்களை அதிகமாக்கி தொல்லை கொடுக்கிறது.

இக்குறைகள் திராவிடர் கழகத்தின் பெருமைகளைக்குலைக்கும் ஆற்றல் பெற்றவை அல்லவாயினும்......கழக வளர்ச்சிக்குத் தடைக் கற்களாயுள்ளன என்பதை மறுக்க முடியாது.

ஆயிரமாயிரம் கிராமங்களிலே ஆதி திராவிட தோழர்கள் தங்களுக்கு தகுதியானது திராவிடர் கழகமென முழக்கமிடுகின்றனர். ஆனால் அவர்களை அணிவகுத்து ...நல்ல அமைப்பு முறைகளைத் தருவதற்குத் தொண்டர்கள் குறைவு. ஆரியலார் நம் கழகத்தை சீர்குலைக்க கையாளும் முறைகளில் அநியாயம் தாண்டவமாடுகிறது. தனிப்பட்ட முறைகளில்...தாக்குதல் நடைபெறுகிறது. பிரஜா உரிமைக்குப் போராடியவர்கள் 144களை பிறப்பிக்கிறார்கள். "எதுவும் செய்யலாம்" என்கிற துணிவு இன்றைய அரசாங்கத்தாரை இரும்பு நெஞ்சத்தவராக்கி..... இயக்கத் தோழர்களின் மேல் .. கண்ட கண்ட பக்கமெல்லாம் கண்ட கண்ட முறைகளில் பாய்கின்ற நிலையை உண்டாக்கியுள்ளது.

ஆகஸ்ட் 15க்குப் பிறகுதான் .....உடையார்பாளையம் வேலாயுதத்தின் பிணத்தைக் கண்டோம்.....உலக உத்தமர் காந்தியைக் கொன்றவன் பார்ப்பனன் என்று கூறியதற்காக—கள்ளனைப் பிடிக்காமல் காவற்காரனை கைது செய்வதுபோல கருஞ்சட்டைப் படை தடையுத்தரவு கண்டோம். நாடெங்கும் துப்பாக்கி சப்தத்தைக் கேட்டோம்;............சாவும் பிணங்களைக் கண்டோம்.

முறையிட்டோம். அமைதி வழி நின்றோம். பட்டேல் நெஞ்சத்தவர் பரிதாபப் படவில்லை. கோட்சே கும்பலின் கொக்கரிப்பு—நம்பினத்து விபீஷணர்களின் சரணாகதிப் படலம்—ரத்தின சாமிகளின் சதி—இவைகளைத் தான் அனுபவிக்க முடிந்ததே தவிர அல்லல் நீங்க வழியில்லை.

இதற்கெல்லாம் ஒரு வழி காண வேண்டும். பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் உறுதி பூணவேண்டும். இதற்குத் தூத்துக்குடியை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் கூடுவது.. கும்மாளத்தோடு கலைய அல்ல!

பிற்போக்கு சக்திகளின் பிடரியில் அடித்து...இழிவுத் தன்மைகளின் இடுப்பை யொடித்து .....நாச காரியங்களின் நரம்புகளைப் பிய்த்தெறிந்து .."எதுவும் செய்வோம்" என்ற அகம்பாவத்தின் ஈரல் குலையைக் கசக்கிப் பிழிந்து—'எமது நாடு திராவிடம்' என்ற இருதய கீதத்தின் சுருதி கெடாமல் சரிசெய்து கொள்ளவே தூத்துக்குடி நிகழ்கிறது என நினைத்துக் கூட வேண்டும். கூடுகிற மாவட்ட, தாலுகா, நகர கழகங்களின் தலைவர்களும் — இன்றுள்ள அமைப்பு முறை இன்னும் விரிந்தால்............ திராவிடர் கழகமும் விரிவடையும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்

தூத்துக்குடியில் நாம் எழுப்புகிற ஒலி அரசாங்கத்தாரின் கண்களையும்—காதுகளையும் ஏக காலத்தில் திறக்கச்செய்து, பெரியார் அவர்களை அழைத்து "திட்டம் தருக" எனக் கேட்கத் தக்க நிலையை உண்டாக்க வேண்டும்.

தூத்துக்குடி தோழர்களின் முயற்சியை பாராட்டுகிறோம்.

இதுவரை நடைபெற்றிராத முறையில் சிறந்த ஏற்பாடுகளுடன் மாநாடு கூட்டும் அவர்கட்கு திராவிடர் கழகத்தின் வரலாற்றிலே இடமுண்டு. மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் வாழ்வைப் பெரிதெனக் கொள்ளாத வீரர்கள். அவர்கள் அழைக்கிறார்கள் திராவிடத்தை நோக்கி; "தூத்துக்குடி வருக!" என்று! நாமும் அவர்களோடு சேர்ந்து அழைக்கிறோம். "வகை கெட்ட நாட்டில் வாழ்ந்து கெட்ட திராவிடப்பெருமக்காள் வருவீர் வழிகாண!"

★

நன்றி.

என் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பத்மா 12—4—48-ல் இயற்கை யெய்தினார்கள். இடு காட்டில் கண்ணீர் வழிய வழிய இயக்கத் தோழர்கள் பலர் எனக்கு ஆறுதல் கூறினார்கள் அந்தக் கண்ணீர் என் துணைவியின் உடலில் பற்றிய தீயை அணைக்காவிட்டாலுங்கூட என் நெஞ்சில் மூண்ட தீயை அணைக்க உதவிற்று. அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான ஆறுதல் கடிதங்கள் என் அமைதி நாடி வந்த வண்ணமுள்ளன. "கலங்காதே" என தேறுதல் மொழி பேசுகின்றன, அவை! என்பால் அன்பு கொண்ட ஏடுகள் என்னையும் என் குடும்பத்தாரையும் "துயர் விடுக" எனத் தேற்றுகின்றன. அனுதாபத்தோடு கலந்து பொதுப்பணிக்கு வருக என்ற அன்பர்கள் ஆணையை நான்சிர மேற்கொண்டேன் என்பதை... தெரிவித்துக்கொண்டு ஆறுதல் எழுதிய அன்பர்களுக்கு நன்றி அறிவிக்கிறேன்.

வணக்கம்,
மு. கருணாநிதி.

இசைவேளாளர் மாநாடு.

மன்னார்குடி தாலுக்கா, திருமக்கோட்டை ரேஞ்சு, இசை வேளாளர் 2-வது மாநாடு 14-4-48-ல் திருமக்கோட்டையில் திருவெண்காடு திரு, T. P. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நீடாமங்கலம், திரு. N. T. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சமூகக்கொடி ஏற்றி வைத்தார். புலிவலம், திரு. மகாதேவன் அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்தார். குளிக்கரை திரு K. S பிச்சையப்பா அவர்கள அருணகிரியார் படம் திறந்துவைத்தார், காந்தியார் படமும் திறக்கப்பட்டது. திரு, T. N இராசரத்தினம் சொற்பொழிவாற்றினார். ஜில்லா மாநாடு கூட்டாதற்கு வருந்துவதாகவும், தேவதாசி ஒழிப்பு மசோதா நிறைவேற்றி சட்டமாக்கியதற்கு ஆட்சியாளரைப் பாராட்டியும், திருவையாறு தியாகப் பிரம்ம உற்சவக் கமிட்டியின் செயலாளர் திருவீழிமிழலை M. R. S. சுப்பிரமணியம் அவர்களை ஒரு தனிப்பட்ட சமூகத்தார் சூழ்ச்சியாக வெளியேற்றியதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

மாநாடுபற்றி நமது கருத்து...

1. காந்தியார் படம் திறத்ததை நாம் மறக்கவில்லை யானாலும்...... ..... தென்னாட்டைப் பொறுத்தவரையில் இசைவேளாளர் இழிவு தீரடைக்க ஆலோசனை ஈரோட்டுப் பெரியார் வீட்டு திண்ணையில் நடைபெற்றது என்பதை மறந்து, அவரை நினைவு படுத்திக்கொள்ளாதது வருந்தத் தக்கது.

2. திருவையாற்று தேவர்களின் சதியால் ஒரு இசை வேளாளர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார், என்பதைக் கண்டிப்பது... .....வருந்தம் விளைவிக்கும் செயல், ஆரியக்கூட்டத்தினரிடம் இன உணர்ச்சி இருக்கிறது. தங்கள் சாதிக்காரர் தியாகய்யருக்கு திருவிழா நடத்துகிறார்கள். தேசிகர் தமிழ்பாடியதால் மேடை தீட்டாயிற்று என்றார்கள். கவிஞர்கள், பாவலர்கள் நம்மினத்தில் இருந்ததை -இருப்பதை, மறந்து தியாகய்யரிடம் மண்டியிட்டுக்கிடந்தது யாருடைய தப்பு?

3. சிக்கல் முடிவுப்படி ஜில்லா மாநாடுகூட்டாததற்கு...வருந்துகிற தீர்மானம் சிக்கலில் இருந்தவர்களே இங்கும் இருக்கும் போது...தேவையில்லை...

ஏஜண்டுத் தோழரே!

சில ஏஜண்டுத் தோழர்கள் பட்டியல் பணத்தை சரிவர அனுப்பி வைக்காத காரணத்தால் குறித்த காலத்தில் பத்திரிகை வெளிவர முடியாமல் — வெளிவரினும் அவர்களுக்கு அனுப்ப முடியாமல் தடை ஏற்படுகிறது. "முரசொலி"— கொள்கை வெறிகொண்டு ஒலிக்கிறதே தவிர பணப்பித்துக்கமுடன் சுயநலப் பித்துகொண்டு வெளிவருவதல்ல என்கிற உண்மையை உணர்ந்து கடமையாற்ற வேண்டுகிறோம். ஏஜண்டுகளின் மௌனம் வாசகர்களுக்கு முரசொலி வளர்ச்சியில் தவறான எண்ணத்தையுண்டாக்க உதவுகிறதே என்பதை எண்ணி வருந்துகிறோம்.

ஆசிரியர்: முரசொலி.

(5-ம் பக்க தொடர்ச்சி)

இன்னமும் இடுப்பில் வேட்டி உடுத்திக்கொள்ளக் கற்றுக் கொள்ளாதவர், கால் சட்டை, கழுத்துச்சுருக்கு நாகரீகத்தில் ஆழ்ந்து மூழ்கியவர்'' என்பது கல்கியார் அவரைப்பற்றிக் கண்ட குறை.

கல்கியாரே! முதலியாருக்கு வேட்டி உடுத்தத் தெரியாது தான்...அந்தப் பணியைத் தாங்கள் சற்று...வேண்டாம் உங்களை வேதனைக்காளாக்க வில்லை. நல்ல வேளை அவருக்கு கோவணம் கட்டி கோவணச் சாமியாக்க எண்ணாமல் இருந்தீரே!...அந்த நல்ல எண்ணத்துக்கு ஒரு வணக்கம்'' என்று சொல்லத்தான் தோன்றும். மற்றும் "ஆங்கில பாஷை ஆங்கில நாகரீகம், ஆங்கில நடை உடை பாவனை— இவற்றையே மோட்ச சாதனங்களாகக் கருதுகிறவர்......இப்பேற்பட்டவரை வைஸ் சான்சலராக கொண்ட சென்னை சர்வ கலாசாலை பிற்போக்கில் பிரக்யாதி அடைவதில் வியப்பில்லை'' என்கிறார்.

லட்சுமணசாமி முதலியாரின் நெற்றியிலே......மெல்லிய சிவப்புக்கோடு நிற்பதை கல்கியார் கண்டால் அவர் ஆரியத்தின் விரோதி என்கிற அச்சம் ஏற்படாது, கல்கியாருக்கும், அவர் இனத்து கனபாடிகளுக்கும்! சரியாகத் தெரியாவிட்டால் பூதக்கண்ணாடி மூலமாகவாவது முதலியாரின் மத பக்தியின் "மார்க்கை" கூர்ந்து கவனித்து கல்கியார் சாந்தியடைய வேண்டுகிறோம்.

எல்லாவற்றையும் விட்டு கடைசியாக, "மாணக்கர்களுக்குள்ளேயே கட்சிகள், அடிதடிகள், இந்தியதேசியக் கொடிக்குப் பதிலாக கருப்புக்கொடி ஏற்றுதல்-அதை இறக்குதல்— இதைப்பற்றி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கேசுகள்—கலைத் தெய்வமே! இத்தகைய கலாட்டாசாலையிலும் நீ குடியிருப்பாயோ? என்று ஆத்திர ஓசை முழக்குகிறார் அலை ஓசைக்காரர்.

கலைத்தெய்வமென்று ஒன்று இருந்தால் அண்ணாமலை நகரில் நடந்த குழப்பத்திற்கு மூலகாரணம்—காரணஸ்தர்—எது, யார் என்பதை நீதிபதியின்முன் தோன்றி கூறியிருப்பாள். அல்லது அசரீரியாவது கேட்டிருக்கும். ஒருதலைப்பட்சமாக தேசிய மாணவர்கள் மேல் தொடுக்கப்பட்ட 'வழக்கு வாபஸ்' நாடகம் நடந்திருக்காது. இதெல்லாம் கலைத் தெய்வத்தின் அருள் அல்ல கல்கியாரே!......லட்சுமி தேவியின் கடாட்சம் எனக் கூற விரும்புகிறோம். பெரியார் பிறந்த நாளில் கலகம் செய்தனர் கதர் சட்டை மாணவர். கருப்புக் கொடியை இறக்க முற்சித்தனர் அந்தப் பரந்த கருத்தினர் என்றெல்லாம் அறிக்கை கொடுக்கிற அண்ணாமலை வைஸ் சான்சலர்......கடைசியில் கழுநீர்ப்பானையில் கையை விட்டு தேமழர் மதியழகனுக்கு பரிட்சை எழுதலாகாதெனத் தடைவிதித்து விபீஷணாக மாறியும் கூட கல்கியாரின் குற்றப் பத்திரத்துக்கு இலக்காகி விட்டதுதான் பரிதாபம்.

"வைஸ் சான்சலர் ரத்தின சாமி அறிஞராயிருககலாம். கல்விமானாகயிருக்கலாம். ஆனால் அவர் தேசிய இயக்கத்துக்கும் இந்திய சுதந்திரத்துக்கும் பெரும் விரோதியாயிருந்தார்..." கல்கியார் பேனாபோகும் போக்கு இது. நல்லவர் என்ற பெயா எடுக்க ஒரு மாணவர் வாழ்க்கையை ஆரிய பலிபீடத்தில் நிறுத்தியுங்கூட அன்பர் ரத்தின சாமி அவர்கட்கு ஆரியத்தின் ஆசி கிடைக்காததின் காரணம் அவருக்கே புரியாது. "பாபம்"! ...ஒரு பக்கத்து இடி பொறுக்க முடியாத உரல்......மத்தளமாக மாறிய கதையாக முடிந்தது.

தேசிய மனப்பான்மை கொண்ட வைஸ் சான்சலர் வேண்டுமாம். கல்கியார் கோருகிறார். போஸ்டாபீஸ், சப் ரிஜிஸ்டர் ஆபீஸ், கொளுத்திய ஆகஸ்ட் தியாகிகளைக்கூட தேச பக்தி முத்திரை போட்டு கல்கியார் சிபார்சு செய்வார். அவரது "பொருத்தகாலம்" ஆச்சாரியார் வங்கத்தில் வாழ்கிறார். இப்போதுதான் என்ன?......இந்த ரத்தினசாமிகள் இருக்கும் பொழுது!.........

இப்போதுள்ள கல்வி ஆலோசகர் சரியில்லையாம். ஆதலால் நீதிபதி ராஜமன்னார், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, எஞ்ஜினியரிங் காலேஜ் பிரின்சிபால் ஆகியோரை நியமிக்க வேண்டுமென யோசனை கூறுகிறார் கல்கி.

சரியான மனுஷர்கள்...அவர் சமுதாயத்தை சரியவிடாமல் பாதுகாப்பவர்கள். சமஸ்கிருதம் கட்டாய பாடமாக வேண்டும் என சங்கமூதியவர் ராஜமன்னார். சாஸ்திரியார் ஆரியப் பிரதிநிதி. மூன்றுமவர் ஆரிய பக்தர். கல்கியாரின் 'செலக்‌ஷன்' அபாரம் என்கிறது...... மைலாப்பூர்!

அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுகிற கல்கியாருக்கு நாம் சொல்வது சில உள!......இதை அவர் கேட்டால் போதும்; கல்

(12-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் அரங்கநாதன்...அவர்களுக்குப் பாடம் கற்றுக்கொடுக்காம விருப்பதில்லை.''

''அரங்கப் பெருமானின்...... அடியார்க்கும் அடியேன் நானிருக்க என் கையில் வாளிருக்க வீணாக அவருக்கு ஏன் வேலை?'' இளவரசன் பெருமுழக்கம் செய்து எழுந்தான்.

''போதும் இளவரசே! மதத்தைக் காக்கும் பொறுப்பு மகத்தானது. அது மன்னனின் அதிகாரத்தால் ஆகாது. என் போன்ற மகான்கள் கவனிக்க வேண்டிய வேலை. வைணவம் சாய்ந்தால் வையகம் சாயும், ஒவ்வொரு இரவையும் மோகனாவதாரப் பெருமானுடன் கழிக்கும் எனக்கு இந்தச்சம்பவங்கள் பெரிதெனத் தோன்றவில்லை.''

''ஆச்சார்யா!...அப்பா!...... தங்களை நம்பித்தான் என்னையும், எந்நாட்டையும், எந்நாட்டு மக்களையும் விட்டு உயிர் நீத்தார். நாட்டைக் காப்பது உங்கள் கடன்.'' வைரமுடி கெஞ்சுகின்ற தோரணையில் வாழ்த்துப் பிச்சை கேட்டான்.

''வாழ்க! வாழ்க! இந்நாடு வைகுந்தன் அருளால்!'' குருநாதர் கையை உயர்த்தினார். வஞ்ச நெஞ்சத்தில் கிளம்பிய அந்த வாழ்த்துச் செய்தி ஆண்டவன் தந்த வரப்பிரசாதம் என்றெண்ணினான் இளவரசன். பாம்பு அமிர்தம் கக்குமா? எரிமலை பனிக்கட்டிகளை இறைக்குமா? ஆனால்—ஆச்சார்யா ஆசி தந்த தாகத்தான் இளவரசன் நம்பினான். அவன் கண்களில் நீர்த்துளிகள் அரும்பின. ஆம்! ஆனந்தக் கண்ணீர்.

சோலை, சோலையிலே முல்லை. முல்லையிலே வண்டு. தென்றல் முல்லையை அசைக்க...வெட்கத்தால் ஓடுகிறது என்றெண்ணிய வண்டு.....ரீங்காரம் எழுப்பி, நெருங்க...அப்போது ஒரு மல்லிகை சிரித்து, மணம் சிதற... அழைக்கிறது என்று தவறாக எண்ணிய வண்டு அங்கே பறக்க ...இந்த இன்பமான காட்சி முடிவதற்குள் ஒரு ரோஜா மலர் ஓடி வருவது போல அவள் வந்தாள்.

வந்தவள் சோலையைச் சுற்றிப் பார்த்து.........ஒரு பெருமூச்சு விட்டாள். இயற்கை, கவிஞர்களைப் படைக்கும் இயற்கை, காவியங்களை உண்டாக்கும் இயற்கை.''

அவள் இதை உரக்கச் சொன்னாள். ''என்னை ஒரு கவியாக்கிய இயற்கையே! நன்றியின் காணிக்கையாக ஒரு கவிதை! இதை ஏற்றுக்கொள்.

''மாமரத்தில் தாவுகின்ற
மல்லிகையே—
பாமரர்கள் கூறுகின்ற'சாகி'
உன்னிடத்தில் இல்லையே!''

இதைப் பாடிவிட்டு அந்தக் குயிலாள் குதித்தோடினாள். உலகத்தைப் பற்றிய கவலைப்படாத ஒரு அலட்சியம்... இளமையின் துடுக்கோடு சேர்ந்து கொண்டது. பிறகு அவள் மான்குட்டி தானே! என்னென்னவோ ஆடிப் பாடினாள். ஆடிக்கொண்டே ஓடினாள். 'கலைவாணன்' என்று அகில உலக பட்டமளிப்பு விழாவிலே பெயர் சூட்டப்பட்ட ஒரு சிற்பிசெய்த சிலை உயிரொடுதது உலவுவது போல், படர்ந்து கிடந்த கொடிகளைத் தடவிப் பார்த்தாள். அந்த சோலையின் செடிகளுக்கும், கொடிகளுக்கும் பேச வாயிருந்தால் ''அட பயித்தியமே!'' என்று பரிகாச வார்த்தையால் அவள் காது செவிடு பட்டுவிடும்.

ஆட்டபாட்டம் முடிந்து ..... அவள் வரவுக்காக காத்திருந்த ஊஞ்சலிற் பாய்ந்தாள், ஊஞ்சல் ஆடிற்று! மாமரத்தின் கிளை வளைந்து கொடுத்தது. அவ்வளவு வேகம்!

படைவீரர் எதிரிகள் மேல்
பாய்வது போல் ஆடு!
உடைவாளை வீசியே சாடு
வது போல் ஆடு!
ஊஞ்சலே நீ ஆடு!

ஊஞ்சலுக்கும் ஓர்கவிதைகட்டினாள் அந்த அவள்! ஆம் கட்டழகி! பாடிக்கொண்டிருந்த அவள் பவளவாய் திடீரென மூடிக்கொண்டது. குளிர்ச்சியைக் கொட்டிக் கொண்டிருந்த அவள் கண்கள் கனற்கட்டிகளாயின. இதழ்கள் அவளை அறியாமலே அவள் பற்களால் கடிபட்டன. கன்னங்களில்—கட்டி பாய்ந்து ரத்தம் வழிவது போன்ற சிகப்பு. முகத்தைத் திருப்பிக்கொண்டு மீண்டும் ஆடினாள். ஊஞ்சல் ஆடவில்லை. அவள் கண்கள் ஏதோ ஒரு குறிப்பான இடத்திற்கே கணைகள் போல் பாய்ந்தன. பலமான இரும்புக் கேடயத்தில் மோதி கூர் மழுங்கும் அம்புகள் போலவே மீண்டும் அவள விழிகள் சாய்ந்தன. ஆனால் அவளால் அந்த இடத்தைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ''கேவலம்.....ஒரு சிற்பி!...... எவ்வளவு ஆணவம்?'' அவள் வாய் முணு முணுத்தது. சோலையின் ஓரத்தில் தான் அந்த வீடு, பழைய வீடு. சில இடங்களில் சுவர்கள் சரிந்திருந்தன. வீட்டின் மேல் தளத்திலிருந்த அந்தப் பலகணிதான் அவள் ஆத்திரத்தை அதிகப்படுத்திற்று.

11-வது பக்கம் பார்க்க



பெயர்ப் பொருத்தம்!

[தில்லை வில்லாளன்]

பரமசிவன் நிஷ்டையிலிருந்தார். பார்வதிதேவி வெகு கோபமாக உள்ளே நுழைந்தாள். தனது கணவர் கண்களை மூடிக்கொண்டு கவலையற்று உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவளது சிவந்த நெற்றியில் சிவப்பேறியது.

"போதும் நாதா......"

அம்மையாரின் கரம் ஆண்டவன் கன்னத்தில் பட்டுத் தெறித்தது! தேவியார் கன்னத்தைத் தோளில் இடித்துக் கொண்டதை, அப்பொழுதுதான் கண் விழித்த கைலாநாதர் கண்டார், கலங்கினார், பதறிப்போனார்!

"பார்வதி........"

பதில் இல்லை.

"உமா............"

சிறு முணுமுணுப்பு மட்டும்-

"கோபமா?"

"மானம் போகிறது-பூலோகத்தில் நடக்கிற அக்கிரமத்தைக் கேட்டால்!"

"மனிதர்கள் தானே, மாயை விளையாட்டில் மயங்கியிருப்பார்கள். அதுவும் நாத்திகம் வளர்கிற நாட்களில் நம்மை இழித்தும் பழித்தும் பேசியிருப்பார்கள்—அதைக் கேட்டு கலங்கி விட்டாயா கண்ணே!"

"போதும் நாதா உங்கள் ஞானதிருஷ்டியின் தீட்சண்யம். இது உங்கள் பக்தர்கள் செய்கிற பாதகம்"

"என்ன?"

பார்வதி, தனது கணவரின் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டே காளையேறினார். பூலோகம் வந்து சேர்ந்தனர்.

* * *

மாப்பிள்ளை அலங்காரம் ஆச்சா?

அந்த வெண்பட்டைக் கட்டிக்கச் சொல்!

தலையை வாரி விட்டுக்கொள். கோட்டு எங்கே?

●

பெண்ணை அழைத்து வாருங்கள்.

மாப்பிள்ளை வருகிறார்.

மேளம், மேளம்......

●

யக்ஞியம் வளர்த்தாச்சு.

அய்யர் இப்போதான் வந்தார்.

மந்திரம் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

ஆம், அது கலியாண வீடு தான்! அந்த ஊர் பெரியபண்ணை பரமசிவம் பிள்ளை வீட்டில் அவரது திருக்குமாரர் சுப்பிரமணிய பிள்ளைக்கும் மேலப்பட்டு மிராசு கணபதி பிள்ளைவாளின் திருக்குமாரி தையனாயகிக்கும் பெரியோர்களால் நிச்சயித்து மங்கள வேளையில் மணம்—அதற்குத்தான் அவ்வளவு அமர்க்களம்!

அய்யர் சுள்ளிகளை அடுக்கி நெருப்பை மூட்டி நெய்யைக் கொட்டி 'உளறலை' ஆரம்பித்தார்.

என்ன ஆச்சர்யம்!—ஒரு பொறி தெறித்தது. புரோகிதர் விழியில் பட்டது—ஏன்?

பூலோகம் வந்த அம்மையும், அப்பரும் நேராக திருமண வீட்டில் நுழைந்தார்கள், முப்பத்து முக்கோடி தேவரும், பிறரும், சாட்சியாக 'அக்கினி கேட்டின்' வழியாக வருவதற்குள் அங்கு போய் நின்று கொண்டார்கள்.

"இந்த தம்பதிகள்......"

"இவர்களுக்கென்ன?"

பார்வதி விசித்து விசித்து அழுதாள். பரமசிவன் விபரம் புரியாமல் விழித்தார் ஆந்தை போல—அடடா, அவர் நெற்றிக்கண்ணை மூடிக்கொண்டுதான்!

"கண்ணே உன் கண்களில் நீரா?"

"பின்னென்ன? இவன் பெயர் சுப்ரமண்யம், அவள் பெயர் தையனாயகி! தாய்க்கும் பிள்ளைக்கும் எந்த தடிப்பயல் பொருத்தம் பார்த்தவன்!"

"அட அசடே! இதெல்லாம் மனிதர்கள் வைத்துக் கொள்கிற பெயர்கள்தானே!"

"ஏன் சொல்ல மாட்டீர்கள், கும்மாளம் அடிக்காதீர்கள். இந்த மாப்பிள்ளையின் அப்பன பேர் பரமசிவம், ஆத்தாள் பெயர் சரசுவதி"

இந்த சமயத்தில் திரு திருவென 'அக்கினி கேட்' வழியாக

(11-ம் பக்கம் பார்க்க)

பெயர்ப் பொருத்தம்.

10-ம் பக்க தொடர்ச்சி

ஓடி வந்தார்கள் சிலர். பெருச்சாளிக்கு ஒரே பெருமூச்சு—மயிலுக்கு மயக்கம் வந்துவிடும் நிலைமை—அவ்வளவு வேகமாக விநாயகரும், முருகனும் ஓடிவந்தார்கள். பெற்றோர் அங்கே நிற்பதைப் பார்த்ததும் திகைத்து நின்றனர்.

"அப்பா, இது திருமணமா—தேவர் தலைவர்களை கேலிபேசுகிற காலிகளின் விளையாட்டுக் கூடமா?"

"அம்மா, இந்த அநியாயத்தை தடுக்கிறாரா, இல்லையா? அப்பாவின் நெற்றிக் கண்ணைத் திறக்கச் சொல்லுங்கள்"

"ஏன் இவ்வளவு பதட்டம்?"

"இந்த பெண்ணுடைய பெற்றோர் **கணபதியும் வள்ளியம்மாவும்**"

"அட அநியாயமே!"

ஈஸ்வரன் கடுங்கோபமானார். பெயர்ப் பொருத்தம் பார்த்த புரோகிதர் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சட்டென்று நெற்றிக்கண்ணைத் திறந்தார்—அடடா, அந்த தீயை அள்ளிவிட்டார். அய்யர் பொட்டைக் கண்ணனார்!

இது அய்யருக்கு மட்டும் தான் தெரியும். அவர் பூதேவரல்லவா? அதுவும் எல்லா நடவடிக்கைகளும தேவபாஷையில்!—நமக்குப் புரியுமா? தேவ ரகசியத்தை வெளியில் சொன்னால மண்டை வெடித்துவிடாதா?

பெயர்ப் பொருத்தம் பாருங்கள்—ஆனால் கொஞ்சம் ஜாக்கிரதை! அய்யர் கண் 'அபேசா'கிவிடும்!

★

இரத்தக்கண்ணீர்

9-ம் பக்க தொடர்ச்சி

கறுப்புடை போர்த்துக்கொண்டிருந்த ஒரு மனிதனின் கண்கள் பலகணியின் வழியாக அவளையே பார்த்துக்கொண்டிருந்தன.

"தத்தளிக்கிற மானைக்கண்டு......சில சமயங்களில் வேடன் கூட குறி மாற்றிவிடுவான். செயலற்ற எதிரியைக் கண்டு சில சமயங்களில்...படைவீரன் கூட ஒதுங்கி விடுவான். இந்தப் பாபி...வைத்த கண் எடுக்காமல் என்னைத் தூரத்துகிறானே! .....இயற்கை இன்பம் அனுபவிக்க ஒரே ஒரு இடம் எனக்கிருந்தது. இதற்கும் கேடா? உம் ....

இவனை விடக்கூடாது.....நான் யார்? இவன் யார்? கேவலம் ஒரு சிற்பி!.. எவ்வளவு ஆணவம்?... இதோ அகம்பாவத்திற்கு அழிவு தேடித் தருகிறேன்."

அவள் கொதித்தாள். ஒரு சாதாரண சிற்பியின் பார்வையால்—பலாத்கார காம நோக்கால்—தன் கற்பு அழிந்துவிடுமென்று கருதினாள். மீண்டும் அந்தப் பலகணியைப் பார்த்தாள். அந்தக் கண்கள் அவளை விட்டுப் பிரியவில்லை. "பொன்னழகன்!.........பெயரைப்பார்! சிற்பி!.. அந்தக் காமக் கண்கள் குருடாகட்டும். சிற்பி கபோதியாகட்டும்" அவள் தொடர்ந்து பேசவில்லை. திடுதிடென ஓடினாள். ஒரு நல்ல கூர்மையான கருங்கல்! அதை வெகு வேகமாக வீசினாள். அவள் கல்லை வீசியதுதான் தாமதம்......... "ஆ! .....என் கலை ஒழிந்தது" என்று வீறிட்டபடி ஒரு மனிதன் ஓடினான். பலகணியில் படார் என்ற ஒலியோடு கல் மோதிற்று.

நரம்புகள் எல்லாம் நடுங்க... அவள் அப்படியே நின்றுவிட்டாள். ஓடிக்கொண்டிருந்த மனிதன் நின்று .."இளவரசி!... என்ன காரியம் செய்தீர்கள்?" என்று பேச்சை ஆரம்பித்தான். அவன் வார்த்தைகளை ஆத்திரம் தடுத்து அடைத்துக் கொண்டது. மீண்டும அவன் ஓடினான்: அவளும் அவன் பின்னால் ஓடினாள். (தொடரும்)

பெரியார்

திருவாரூரில் தோழர் மு. கருணாநிதியின் இல்லத்திற்கு 16-4-48 மாலை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் வருகை தந்து துணைவியை இழந்த தோழருக்கு ஆறுதல் கூறிச் சென்றார்கள்.

★ ★ ★

தளபதி.

தளபதி என்னும் மாதப் பத்திரிகைக்கு தோழர் என். இ. பாலகுரு ஆசிரியர், வெளியிடுபவராக பதிவு செய்துகொண்டார். விரைவில்பத்திரிகைவெளிவரும்.

★ ★ ★

உடற்பயிற்சி

திருவாரூர் பாவலர் M. S. பாலசுந்தரம் அவர்கள் குடந்தையிலிருந்து துவக்கும் "உடற்பயிற்சி" மாதப் பத்திரிகைக்கு 2—4—48ல் தஞ்சை மாவட்ட மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆசிரியர், வெளியிடுபவராக பதிவு செய்துகொண்டார். விரைவில் பத்திரிகை வெளிவரும்.

★ ★ ★

8-ம் பக்கத் தொடர்ச்சி

கியாரே! நீங்கள் முதலாவது மைலாப்பூர் கபாலீஸ்வரர் மூல ஸ்தானத்தில் நின்று வணங்குவதை நிறுத்துங்கள். மாம்பலத்தை தியாகராயர் நகர் என்று அழையுங்கள். ராஜாஜி பக்தியை கொஞ்சம் குறையுங்கள். ஏகாதிபத்திய தாசர்களாய் இருந்த மாஜி சர்களான கோபால்சாமி, அல்லாடிகளை அகற்ற முதலில் முயற்சியுங்கள். இதற்கெல்லாம் முன்னரே தாங்கள் கிழப்பாக்கத்தை விட்டு ஜாகையை மாற்றுங்கள் இன்னும் தான் புரியும்படி என்ன சொல்வது கல்கியாரே!

அவர்கட்கே சமர்ப்பணம்.

டாக்டர் சுப்பராயன் சர்க்கார் கட்சித் தலைவராயில்லாத அடுத்த அசெம்பிளிக் கூட்டத்தைப் பார்க்கத் தவறாதீர்கள். ரிங்மாஸ்டர் இல்லாத சர்க்கசைப்போல் பலே ஜோராயிருக்கும். இப்போதே விசிட்டர்கள் காலரி டிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

பாரததேவி (காற்றுடி)

கொம்பு முளைத்திருக்கிறதா என்று தலையையும், வால் வளர்ந்திருக்கிறதா என்று பின் புறத்தையும் தடவிப் பார்த்துக்கொண்டு M. L. A. வைத்தினாதய்யர் விழிக்கிறாராம்"

முரசொலி.

அச்சியற்ற தாள்வர தாமதமான படியால் முரசொலி குறித்த காலத்தில் வெளிவர இயலாமையைத்து அன்பர்கள் மன்னிக்கவும்:

நிர்வாகி.

செல்வம்

சிற்றுண்டி உணவு நிலையம்

விஜயபுரம்-திருவாரூர்.

25—4—48 ஞாயிறு காலை 8-மணிக்கு (பஸ் ஸ்டாண்ட் எதிரில்) பாம்புகுந்தநல்லூர், உயர்திரு M. சாமிநாதன் அவர்கள் தலைமையில், எங்கள் செல்வம் சிற்றுண்டி உணவு நிலைய 3-வது ஆண்டு விழாவும், புதுமனை புகு விழாவும் நடைபெறும். இதையே அழைப்பாகக் கருதி வருகைதந்து என்றென்றும் ஆதரிக்குமாறு கோருகின்ற,

P. அய்யாசாமி, நிர்வாகி A. முத்துகிருட்டினன், உரித்தாளர்

ஓரே முத்தம்!

மு. கருணாநிதியின் இலக்கியச் சித்திரம்-

சுவைமிக்க உரையாடல்கள்!

சோபிதமிக்க கதையோட்டம்!

விலை ரூ. 2–0–0

சொற்ப பிரதிகளே அச்சிடுவதால் வியாபாரிகள் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

விபரங்கட்கு:

பகுத்தறிவுப் பண்ணை,

திருவாரூர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.

பதிப்பாளர்: கருணை. எம். ஜமால்.

கருணாநிதி [மின்னியக்க] அச்சகம், விஜயபுரம்.